உ

ஓம் நாராயணாய நம

# கண்ணன் வந்த வண்ணம்



பொதுசன நூலகம்

ஆக்கியோன்

அருட்கவியரசு: சி .விநாசித்தம்பிப்புலவர்

அவர்கள்

வெளியிடுபவர்

வைத்திய கலாநிதி

செல்வி சிவலிங்கராணி விநாசித்தம்பி

அவர்கள்

அளவெட்டி - நாகேஸ்வரம்

03 - 09 - 1998



பொது சன நூலகம்
29 DEC 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# கண்ணன் வந்த வண்ணம்

124029

ஆக்கியோன்
அருட்கவியரசு சி. விநாசித்தம்பிப்புலவர்
அவர்கள்
(ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்)

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

**03-09-1998**

அளவெட்டி - நாகேஸ்வரம்

முதற் பதிப்பு 02.09.1990

2
294.5

உ

# முன்னுரை

அவதாரம் என்றால் இறங்கி வருதல் என்பது பொருள். அண்டசராசரமானவன். அங்கிங்கெனாமல் எங்கும் நிறைந்த பரம் பொருள். ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலிப்பதற்காகப் பல் வேறு திருவுருவங்கள் எடுக்கிறான். தான் எடுத்த வடிவுடன் மக்களுக்குக் காட்சி காட்டிப் பற்பல திருவிளையாடல் செய்கிறான்.

ஒரே பரம்பொருள். எடுத்த வடிவங்களுள் ஒன்று ஸ்ரீ நாரா யணன் வடிவம். அந்த நாராயணனே ஆயவடிவு பதினாறாயிரம் கொண்டவன். அந்த வடிவங்களுள் ஒன்றாக ஸ்ரீ கிருஷ்ணபர மாத்மா என்னும் கண்ணன் அவதாரம் அமைகிறது.

அவர் உதித்த தினமே ஆவணி மாத ரோகிணி நட்சத்திரம் பொருந்திய அட்டமித்திதியாகும். அத்தினம் கிருஷ்ணஜயந்தி எனக் கொண்டாடப்படுகிறது.

இந்நூல் அவர் வந்த வண்ணத்தைச் சுருக்கமாகக் கூறுவது. இதனைப் படித்து கண்ணன் அடியார்கள் பக்தி பரவசமடைவார் களாக. கண்ணன் திருவருளால் இஷ்ட சித்திகளைப் பெற்றுய் வார்களாக என வாழ்த்துகிறேன்.

வணக்கம்

4853cc

அன்பன்

அருட்கவி. சி. வி

ஆக்கியோன்

நாகேஸ்வரம்,
அளவெட்டி,
01-09-90

## காப்பு

உலகுக் கொருமுதலே ஓங்கார நாதக
கலைவடிவே செல்வக் கணேசா - நிலையில்லா
நாயேனின் நெஞ்சினிலே ஞானகுரு வாயிருப்பாய்
தாயாகி வேண்டுவன தந்து.

செல்வ விநாயக சரணம் சரணம்
தில்லை நடேசா சரணம் சரணம்
தேவி மனோன்மணி சரணம் சரணம்
சிவமுரு கையா சரணம் சரணம்
சொல்வளர் கண்ணா சரணம் சரணம்
சுடர்வி ரையா சரணம் சரணம்
துணைஐ யப்பா சரணம் சரணம்
சோதி வைரவா சரணம் சரணம்

## ஸ்ரீ வாணி

வெள்ளை வடிவத்தில். வேண்டுமடி யார்நினையும்
உள்ளக் கமலத் துறைபவளே - கள்ள
வினையேன்நா விற்றிருக்கும் வேணியே கண்ணன்
இனியகதை பாட அருள் இங்கு

# கண்ணன் வந்த வண்ணம்

---

## நூல்

பாடுவோம், படுவோம், பாடுவோம்.........
பாண்டுரங்கதேவதேவன் பாதம் போற்றிப் பாடுவோம்



நாடுமின்ப நலம்சுரக்கும் நாகவரத நாரணன்
ஞாமெல்லாம் ஈரடியால் அளந்தெடுத்த பூரணன்
கூடுமிடையர் கூட்டத்திலே வளர்ந்து வந்த பாலனை
குறையகற்ற அவதரித்த கிருஷ்ணஞான சீலனை (பாடு

## திருவருள் நிறைந்த மெய்யடியார்களே!

எல்லாம் வல்ல பரம்பொருள் தம்மை நம்பின அடியார்களைக் காப்பாற்றிப் பேரின்ப வாழ்வு தருவதற்காக மனிதருள் மனிதனாகப் பற்பல அவதாரங்கள் எடுக்கிறான்.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

என்று கம்பராழ்வார் குறிப்பிடுகிறார்,

இல்வாலயத்திலே கோயில் கொண்டருளிய பெருமான் இரு பாம்புகளாகக் காட்சி காட்டிப் பற்பல அற்புதங்கள் செய்து நாகநம்பிரான் என்ற பெயரோடு போற்றப்பட்டு வந்த ஸ்ரீ கிருஷ்ணன் ஆவர். நாகமாய் காட்சி காட்டிய படியால் நாகவரத நாராயணர் என்ற பெயரைப் பெற்றார் நாராயணர் இந்தப் பூவுலகில் கண்ணனாக அவதரித்த தினமே ஆவணிக் கிருஷ்ண ஜெயந்தி தினமாகும். அவரது அவதார வரலாற்றை மக்கள் தெரிந்து வழிபட்டு நலம் பெறுமாறு சுருக்கமாகக் கூறுகிறோம்.

பூமியின் கொடிய பாரங்களைத் தாங்கமுடியாமல் பூமாதேவி பாற்கடலில் பள்ளி கொள்ளும் ஸ்ரீ நாராயண மூர்த்தியிடம் முறையீடு செய்கிறாள்

சீராரும் உலகங்கள் எல்லாம் - காக்கும்
திருமாலின் அவதாரப் பெருமையுரைப் பேனே
தாராரும் துளபமணி மார்பன் - வேத
சாரங்க பாணியின் வருமையுரைப் பேனே.

அவதாரம் பலகோடி கொண்டான - அவற்றுள்
அருட்கண்ணன் அவதாரப் புகழினைக் கேளீர்
புவனத்தின் கொடும்பாரம் கண்டு - அன்னை
புவிமாது பசுவினது வடிவினைத் தாங்கி

தேவர்புடை சூழ்ந்துவரச் சென்று - மாயன்
திருப்பள்ளி செய்கின்ற பாற்கட லடைந்தாள்
கோவிந்தா வைகுந்த வாசா - என்றன்
குறைகேட்டுத் திருவுள்ளம் இரங்குவாய் போற்றி

பூமாதேவி பசுமாட்டின் வடிவமெடுத்தாள். தேவர்கள் எல்லோரும் பூமாதேவியைச் சூழ்ந்து கொண்டனர். எல்லாரும் பரந்தாமனிடம் முறையீடு செய்தனர். பூமியின் பாரம் பொறுக்க முடியவில்லையே, நடக்கும் அநீதியைத் தாங்க முடியவில்லையே நாராயணா, அசுரரை அழித்து நீதியை நிலைநாட்ட வேண்டும் ஐயனே என வேண்டி நின்றனர்.

எம் பெருமான் திருச்செவிமடுத்தான். பூமாதேவியே தேவர்களே நீங்கள் அஞ்சவேண்டாம் கொடியாரை அழித்து அடியாரைக் காக்கயான் வருவேன்- யான்



இடையர் குலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாயும் தேவர்களாகிய நீங்கள் இடையர் குலத்தவராகவும் அவதாரம் தாங்குவோம், என்று நாராயணமூர்த்தி திருவாய் மலர்ந்தாய்-

என்றுபூ தேவியும் இமையோர் அனைவரும்
நின்றுநெக் குருக நெடுமால் விழித்து
துன்றிடு கதிர்முடி துலங்கிடப் புன்னகை
நன்றுறப் புரிந்து தாமுமைக் காப்போம்

தேவர்க ளெல்லாம் யாதவர் ஆகுக
தேவமா தர்களும் கோபிய ராகுக
மெவுமென் அம்சம் விளங்காதி சேடன்
நாவுயர் அண்ணனாய் ஞாலத் துதிப்பான்

பார்மக ளேநின் பாரம் தீர்ந்திட
பேர்வளர் கண்ணனாய்ப் பிறப்பேன் யானே
நீர்மலி பாற்கடல் நீங்கிப் பூமியின்
சீர்பெற உதிப்பேன் செயல்காண என்றான்

ஸ்ரீ நாராயணர்

# கண்ணன் அவதாரம் எடுக்கிறார்

மதுரை மாநகரிலே ஒரு தெய்வீகத் திருமணம் நிகழ்கிறது. வசுதேவர் என்ற புண்ணியனுக்கும் தேவகி என்ற பெண்மணிக்குமே அத் திருமணம் நடந்தது.

தேவகியின் சகோதரன் கம்சன் என்ற மன்னன் சகோதரியின் திருமணம் ஒப்பேறியதும் புதுமணத் தம்பதிகளைக் குதிரை வண்டியில் ஏற்றிக் கொண்டு வீதியுலா வருகிறான். அப்போது ஒரு அசரீரி வாக்கு வானில் எழுந்தது.

"அடா மூடனே நீ செய்யும் கொடுமைகளைப் பொறுக்காத தேவர்களின் முறைப்பாட்டின் படி உனது சகோதரியின் வயிற்றில் பிறக்கப் போகும் எட்டாவது குழந்தையால் உன் வாழ்வு முடியப் போகுகிறது" என்பது தான் அர்தவானொலிவாக்கு.

## தேவகியை வசுதேவர் திருமணம் பூண்டு வரும் வழியில் ............

---

மாம துரைப்பதி வசுதேவ கோனுக்கும்
மங்களத் தேவகிப் பைங்கிளிக்கும்
பூமண மாகிப் புறப்படும் வண்டியின்
பொற்பரி ஓட்டினான் கம்சமன்னன்

வண்ணச் சகோதரி வாழ்வு சிறந்திட
மனங்கொண்ட கம்பசன் சினங்கொள்ள
விண்ணில் எழுந்தது திண்ணிய வாக்கொலி
வேகத்தின் வண்டியை நிறுத்தி நின்றான்

இன்பச்சகோதரி தேவகி பெற்றிடும்
எட்டாம் குழந்தையால் உன் வாழ்வில்
துன்பமும் மரணமும் வந்திடு மென்றங்கு
சொன்னது வானொலிப் பொன்வாக்கு



இதைக்கேட்ட கம்சன் கோபத்துடனே வண்டியை விட்டிறங்கினான் தனது தங்கையாகிய தேவகியை வெட்டிக் கொன்றுவிட்டால் ஒரு குழந்தையுமே பிறக்காதல்லவா? என்று தனது வாளை ஓங்கினான். அப்போது வசுதேவர் அழுது புலம்பிக் கெஞ்சினார். எமக்குப் பிறக்கும் பிள்ளைகளை உனது கையிலேயே ஒப்படைக்கிறோம். இது சத்தியம். சத்தியம். சத்தியம் என்றார்.

இவ் வார்த்தையைக் கேட்ட கம்சமன்னன் - கோபம் தணிந்து தன் வாளை உறையிலே போட்டு - பயணத்தைத் தொடர்ந்தான்.

சட்டென் டிறங்கினான் தங்கையை வெட்டினால
தான்பிழைப் பேனென்று வாளெடுத்தான்
வெட்டவேண் டாமபெற்றபிள்ளைகள் யாவையும்
விரைந்துனக் கேதரு வோமெனவே

வசுதேவன் கெஞ்சினான் மனந்தேறினான் கம்சன்
வருந்திய தேவகி பயமொழிந்தாள்
பசுமை பொருந்திய ஆறு குழந்தைகள்
படிப்படி யாகப் பிறந்தார்கள்

## ஆதிசேடன் பலராமனாகிறான்

ஏழாங் கருவிலே எழிலாதி சேடனை
எம்பெரு மான்கண்ணன் சொற்படியே
வாழு முரோகிணி பலாரம னென்கின்ற
மைந்தனாய்ப் பெற்றனள் மா நிலத்தே

## மாமாயை வைஷ்ணவி (துர்க்கை) ஆகிறாள்

*மன்னுய சோதையின் வயிற்றினில் மாமாயை*
*வைஷணவி எனுமொரு கருவானாள்*
*உன்னிய நாரணன். தேவகி வயிற்றிலே*
*உற்றிடும் கண்ணனாய் உற்பவித்தான்*

தேவகிக்கு 6 குழந்தைகள் பிறந்து விட்டார்கள். 7ம் கருவிலே ரோகினி என்ற பெயருடைய அம்மையார் வயிற்றில் தனது அம்சமாகிய ஆதிசேடனைப் பலராமன் என்ற தமையனாகப் பிறக்கும்படி செய்தார் எம்பெருமான்.

இனி 8ம் குழந்தை தான் கண்ணன் அவதாரம். கண்ணனாகிய பச்சைக் கள்வன், தன்னுடைய மகா மாயையை ஆயர்பாடியிலே இடையர் குலத்திலே நந்தகோபன் யசோதை என்னும் தம்பதிகளுக்கு பெண் குழந்தையாகப் பிறக்குமாறு திருவுளம் கொண்டார்.

தேவகி வயிற்றிலே கண்ணன் கருவானான்- இறவாத பிறவாத பரம்பொருள் - உலகத்திலே நீதி பிறக்க அறம் சிறக்க வந்து பிறக்கப் போகிறான்.

கண்ணன் பிறக்கும் நாளை எதிர்பார்த்திருகிறான் கம்சன்.

கம்சனின் முன்னே நாரதப்பிரம்மம் தோன்றினார் ''மன்னா, உன் சகோதரி எட்டாம் குழந்தையைப் பெறப்போகிறாள். அந்தக் குழந்தையாலே உனக்கு



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மரணம் என்பதை மறந்துவிட்டாயோ? வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொள்'' என்று கூறி விட்டு மறைந்தார்.

திகைத்தான் கம்சன் தேவகியையும் வசுதேவரையும் சிறையிலே கை விலங்கு பூட்டித் துன்புறுத்தினர்ன்.

எந்தக் குழந்தையைக் கண்டாலும் இவன் கண்ணனாக இருக்கலாமோ என்ற பயம் கம்சனை வாட்டிக் கொண்டிருந்தது.

*நஞ்செனும் கம்சனை நாரதர் நண்ணினார்*
*ஞாபக மூட்டினார் காரியத்தை*
*நெஞ்சு குமுறினான் வஞ்சனை எண்ணினான்*
*நிறைகர்ப்ப தேவகி தனையழைத்தான்*

## கருவுற்ற தேவகியும் வசுதேவனும் சிறையில்

*கைவிலங் கிட்டங்கு தேவகி வசுதேவர்*
*கலங்கச் சிறையிட்டுக் கொடுமை செய்தான்*
*வையகத் திற்கண்ட குழந்தைகள் யாவையும்*
*மாயவ னோவென்று மனந்தளர்வான்*

*தேவகி பெறுகின்ற எட்டாங் கருப்பிள்ளை*
*செனிப்பதை எதிர்பார்த்துக் காவலிட்டான்*
*காவலில் துன்பக் கடலிற் கிடந்தவள்*
*கடலிற் கிடந்தோனைக் கருத்தில் வைத்தாள்*

எம்பெருமான் சிறையிலிருந்த தேவகி மகனாக ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரம் அட்டமித்திதி பொருந்திய நல்ல நேரத்திலே திரு அவதாரம் பண்ணினார். தேவகி அம்மையாரின் கைவிலங்குகள் தெறித்துப் பறந்தன சிறைக்கூடம் நான்கு மறைக்கூடமாகியது விண்ணவர் பொன்மாரி பொழிந்தனர். மண்ணவர் மனங்குளிர்ந்தனர். தேவதுந்துபி முழங்கின. கின்னரர் கந்தருவர் கீதம் பாடினர்.

ஆனால் கம்சன் கொடிய கனவுகள் கண்டவண்ணம் துடித்தான் எழுகிறான்.

## சிறையில் கண்ணன் உதித்தான்

ஆவணி ரோகிணி அட்டமித் திதியிலே
ஆண்டவன் சிறைக்கூடத் தவதாரம் செய்தான்
மேவிடுங் கைவிலங் கெல்லாம் தெறித்தன
விண்ணாதி யண்டங்கள் மின்னிப் பொலிந்தன

மண்ணிற் பிறந்ததும் வாய்மலர்ந் தன்புறக்
கண்ணனும் அற்புதக் கதைகளைச் சொன்னான்
புண்ணிய வசுதேவன் புகழ்மிகு - தேவகி
நண்ணிய பொன்மொழி கேட்டுக் குளிர்ந்தார்

பூமியில் பிறந்தவுடனே கிருஷ்ணனாகிய கண்ண பெருமான் பெற்ற தாயாகிய தேவகிக்கும் வசுதேவருக்கும் ஆறுதல் வார்த்தைகள் கூறித் திருவாய் மலர்ந்தாராம்.



அம்மா, அப்பா நீங்கள் இருப்பது சிறைக்கூடமன்று இது நீதிச் சமுத்திரத் துறைக்கூடம்.

அந்தக் கம்சனை அழிக்கவே யான் பிறந்தேன். உங்கள் அனைவருக்கும் விரைவிலே விடுதலை ஏற்படும் எனது அம்சமாகிய மகாமாயை வைஷ்ணவி என்றும் துர்க்கை என்றும் அழைக்கப்படுகின்ற வீரபராசக்தி ஆவள். அவளை ஆயர் பாடியிலே யசோதைக்கும் நந்தகோபனுக்கும் பெண்குழந்தையாகப் பிறக்கும்படி திருவிளையாடல் மேற்கொண்டுள்ளேன். அம்மா முன்னொரு பிறவியிலே நீங்கள் பிருச்னி என்ற பெயருடனும் வசுதேவர் சுதமஸ் என்ற பெயருடனும் வாழ்ந்து என்னைக் குறித்துத் தவம் செய்தீர்கள். யான் காட்சி தந்த போது என்னைப்போல ஒருமகன் வேண்டுமென வரங்கேட்டீர்கள். அதன்படி உங்களது இப்பிறப்பில் மகனாக வந்தேன். இனி எனது கட்டளையை நிறைவேற்றுங்கள்.

இத்தினமே இரவோடு இரவாக என்னைக் கூடையிலே இட்டுச் சென்று யசோதை அருகே கிடத்தி விட்டு அவள் பெற்ற பெண்குழந்தையை நீங்கள் எடுத்து வந்து உங்கள் அருகே வைத்துக் கொள்ளுங்கள் பின்பு எனது லீலைகளைப் பாருங்கள். என்பது குழந்தைக் கண்ணனின் மணி வார்த்தைகள்.

## கண்ணனின் ஆறுதல் வாக்கு

அம்மா அப்பா கலங்காதீர்
ஆறுதல் கிடைக்கும் கதறாதீர்
சிம்மா சனத்துக் கம்சனுடல்
சீக்கிர மாகத் துணித்திடுவேன்

நம்மொரு மாயைப் பெண்மகவை
நந்தனின் மனைவிய சோதைபெற்றாள்
எம்மையெடுத்தவ ளிடம் சேர்ப்பீர்
இவ்விடம் பெண் மகவெடுத்திடுவீர்

இடையரின் கூட்டத்தில் நான் வளர்ந்தே
இயைந்திடும் ரோகிணி மகனுடனே
கடையவன் கம்சனை யுயிர்போக்கி
களித்திடு வெற்றியும் பெற்றிடுவேன்

என்று குழந்தை இயம்பிடவே
இரவி ாவாக வசுதேவர்
வென்றிடுங் கண்ணனைக் கூடையிலே
மெதுவாய்ச் சுமந்தார் தனிவழியே

அவ்வாறே வசுதேவர் குழந்தைகளை மாற்றம் செய்து கொண்டார். ஆதிசேடன் குடைபிடிக்க யமுனைநதி வழிவிட்டுக் கொடுக்க கண்ணன் ஆயர்பாடியிலுள்ள யசோதையின் அருகே வந்து சேர்ந்து விட்டான்.

யசோதை பெற்ற பெண்குழந்தை தேவகியின் மடியில் கிடந்து அழுகிறாள்.

**தேவகி பெற்ற குழந்தைக் கண்ணன் கோகுலம் சேர்கிறான் யசோதை வளர்க்கிறாள்.**

ஐயனின் மேல்மழை வீழாமல்
ஆதி சேடனார் குடைபிடித்தார்
வையகம் போற்றிடும் ஜமுனைநதி
வழிவிட்டுக் கண்ணனை வணங்கியதே



கண்ணனை யசோதை யருகுவைத்துக்
கனிவொடு பெண்மக வெடுத்துவந்து
துண்ணென தேவகி மடியிலிட்டு
தொழுவசு தேவனும் துயின்றானே.

சிறைக் கூடத்திலே பெண்குழந்தை அழுவது, கம்சனின் செவியில் விழுந்தது. ஓடி வந்தான். பிள்ளையைக் காலில் பிடித்து இழுத்தான். கல்லின் மேல் ஓங்கி அடித்தான் வாளை எடுத்து வெட்டுவதற்கு முயற்சித்தான். கம்சனின் கையில் சிக்கிய குழந்தை ஆகாய வெளியிலே வீரமகா சத்தியாகக் காட்சி தந்தார். ''அடா பாதகனே உன்னைக் கொல்வதற்குப் பிறந்தவன் ஆயர் பாடியில் வாழ்கிறான். இன்னும் சில தினங்களில் அந்தக் குழந்தையாகிய கிருஷ்ணன் உனது தலையைத் துணிப்பான்'' என்று அந்த ஆகாயக் காட்சி தந்த மகா வீர துர்க்கை வாக்குரைத்து மறைந்தாள்.

**மாற்றம் செய்யப்பட்ட பெண்மகவை............ கண்ணனென எண்ணிக் கம்சன் சீற்றம்.........**

குழந்தை அழும்பெரு மொலிகேட்டு
கொடியவன் கம்சன் ஓடிவந்தான்
விழுந்து புலம்பினள் தேவகித்தாய்
வெட்டா தேயெனப் பரிந்து நின்றாள்

கம்சனும் குழந்தையைக் கழிதிழுத்துக்
கல்மேல் ஓங்கி யடித்தானே
அம்சம காசத்தி வடிவுடனே
ஆத்தாள் விண்ணெழுந் துரைபகன்றாள்

## வைஷ்ணவி - வாக்கு

அடடா உன்னைக் கொல்லுபவன்
ஆயர் பாடியில் பிறந்துள்ளான்
கெடடா இன்னும் சிலநாளில்
கிருஷ்ணன் உன்தலை கொய்திடுவான்

## கம்சன் கட்டளை

வித்தக வைஷ்ணவி மொழிகேட்டு
வெந்திடு கம்சன கொதித்தெழுந்தான்
பத்துத் தினங்களுட் பிறந்திருக்கும்
பாலகர் தலைகளை வெட்டுவித்தான்

இந்த அதிசய வார்த்தைகளைக் கேட்ட கம்சமன்னன் கடுங்கோபம் கொண்டான். பற்களைக் கறகற வென்று கடித்தான். தோள்களைத் தட்டினான் உடல் நடுங்கினான். கண்களில் தீப்பொறிகள் பறந்தன... ஏவலாளரை அழைத்தான் ‘எனது அரசாங்கத்தில் உள்ள நாடெல்லாம் சென்று 10 நாட்களுட் பிறந்திருக்கும் எல்லாக் குழந்தைகளையும் எடுத்து வாருங்கள். அக் குழந்தைகளுக்குள்ளே கண்ணனும் ஒருவனாக இருப்பான். சிக்கிரம்'' எனக் கட்டளையிட்டான்.

எண்ணிலாக் குழந்தைகள் கொண்டு வரப்பட்டன எல்லாக் குழந்தைகளின் தலைகளையும் அந்த மகா கொடும்பாவியானவன் தனது வாளாலே வெட்டி மலைபோல் குவித்தான்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

124029

அந்த தலைகளுக்கே ஸ்ரீ கிருஷ்ணனாகிய கண்ணனின் தலையைக் காணவில்லை. ஒகோ கண்ணன் மறைந்து வாழ்கிறான். உடனே பூதனை என்கின்ற பெண்பேயை அழைத்தான் ‘‘பூதனையே நீ மாயவடிவமெடுத்துச் சென்று பால் குடிக்கும் பச்சைக் குழந்தைகள் எல்லாவற்றுக்கும் உனது நச்சுப் பாலைக் கொடுத்து இறக்கும் படி செய்வாயாக'' எனப் பணித்தான்.

கட்டளைப்படி சென்ற பூதனை, ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று தனது கைவரிசையைக் காட்டினாள். அவ்விதமே ஆயர்பாடியிலும் நுழைந்து யசோதையுடனே படுத்துறங்கிய கண்ணனை மெதுவாகத் தூக்கித் தாலாட்டித் தனது பாலையூட்டினாள். எம் பெருமான் பூதனையின் பாலையும் குடித்து அவளது உயிரையுமே குடித்து விட்டான்.

4553 cc

## பூதனை பாலூட்ட வந்து மடிதல்

வெட்டிக கொணர்ந்திட்ட பாலகரின் தலையுள்
வேணுகோ பாலனின் தலையில்லை என்று
பட்டிப் பசுக்குலம் சென்று வஞ்சனையால
பாலரைக் கொல்லஒரு பூதனையை விட்டான்.

பொல்லாத கம்சனின் கட்டளைப் படியே
பூதனை எனுங்கொடியள் பாலூட்டவந்தாள்
மல்லாடி யவள்முலையை வாரிக்குடித்து
மாய்த்திட்டான் மாயவன் வாயசுற் கடித்தே

## திராத விளையாட்டு

இவ்விதமாக கண்ணன் ஆயர்பாடியிலே திருநடனம் புரிகிறான். அவன் தவழ்ந்து விளையாடும் வீட்டு முற்றத்தில் இரு மருதமரங்கள் நெருக்கமாக நின்றன. குபேரனின் மக்களாகிய நள கூபன் மணிக்கிரீபன் என்னும் தேவர்களே தாம் பெற்றசாபத்தாலே அந்த மருதமரங்களாகி நின்றனர்.

கண்ணன் தனது தோழர்களுடனே அவ்வூர் ஆய்ச்சியர் தேடி வைத்த தயிர் வெண்ணெயைத் திருடி உண்பதும் தோழர்களுக்குக் கொடுப்பதும் வழக்கம் எல்லாப் பெண்களும், கண்ணனின் தாயாகிய யசோதையிடம்வந்து தினமும் முறையிடுவார்கள். முறைப்பாட்டைப் பொறுக்காத யசோதையம்மா கண்ணனின் வயிற்றில் கயிறு கட்டி அந்தக் கயிற்றால் அந்தப் பரம்பொருளை உரலோடு கட்டி வைத்தாள். கட்டி வைத்துவிட்டுத்தாயாள் தனது கருமங்களைப் பார்க்கச் சென்றுவிட்டாள். கண்ணன் அந்த உரலையும் இழுத்து இழுத்துத் தவழ்ந்தான். இரு மருதமரங்களுக்கிடையே தவழ்ந்தான். மருதமரங்களின் இடையே (குறுக்கே) உரலை இழுக்கமுடியாமல் தடைஏற்பட்டது. வேகமாக இழுத்தான். மரங்கள் இரண்டும் மண்ணில் சாய்ந்தன இரண்டு தேவர்களும் சாப விமோசனம் பெற்னர் கண்ணனை வணங்கினர். ''எம் பெருமானே உனது திருவருளால் சாபம் நீங்கினோம்,'' என்று, விடை பெற்றுச் சென்றனர். இப்படியாகக் கண்ணனின் அற்புத லீலைகள் எண்ணில்லாதனவாக நிகழ்ந்தன.



## கண்ணன் திருவிளையாடல்

தேவகியின் மகனாய செங்கமலக் கண்ணன்
சீரார் யசோதையின் செவவமகனாக
ஆவினம் பால்பொழியும் ஆயர்பாடி யிலே
ஆடுவான் குழலூதிப் பாடுவா னினிதே

பலராமன் என்கின்ற ரோகிணியின் மகனும்
பக்கத்து வீட்டாரின் சிறுவரும் சேர
பலவீடு வீடாகப் பால்வெண்ணெய் திருடிப்
பகிர்ந்துண்ணும் விளையாடல் செய்தனன
கண்ணன்

### மருதமரமாகிநின்ற நளகூபன், மணிக்கிரீவன் என்னும் குபேரகுமாரர்கள் சாபம் நீங்குதல்

உறிதிருடும் முறைப்பாடு தாய்க்குவந் துரைக்க
உரலோடு கட்டினாள் ஓங்காரப் பொருளை
நெறிகாணும் மருதினிடை தவழ்ந்தான் முகுந்தன்
நின்றஇரு தேவர்களும் சொந்தவடி வானார்

### வேறுசில லீலைகள்

கன்றான வரக்கனை விளவுக் கெறிந்தான்
கருநாரை வடிவான பகனைப் பிளந்தான்
நின்றாடும் பாம்புருவ அகாசுரன் தன்னை
நெடுமாயன் வதைசெய்து புகழ்மாலை கொண்டான

கழுதையுரு வங்கொண்ட தேனுகாசுரனை
கால்பற்றிப் பனையிலே மோதித் தொலைத்தான்
தொழுயமுனை நதிநின்ற காளியன் மேலே
சுந்தரத் திருநடனம் ஆடியருள் செய்தான்

### கிரிதரனாகியது

இடையர்கள் தைப்பொங்கலுக்கு மறுதினம் பட்டிப்பொங்கல் பொங்குவார்கள். மழை பெய்வதற்காக இந்திரனைக் குறிப்பிட்டு இப்பொங்கல் நடக்கும் இதனைக் கண்ணன் பார்த்தான் - மலைகள். மாடுகள் வேதங்கள் இவற்றுக்காகவே நீங்கள் பொங்கல் செய்ய வேண்டும். இந்திரனுக்குப் பொங்கக்கூடாது என்றான். அப்படியே கோகுலத்தார் பொங்கல் முறையை மாற்றிக் கொண்டனர். இந்திரன் வெகுண்டான் என்னை இகழ்ந்த கோகுலம் அழியட்டும் என்று கல்லுமழை பெயவித்தான் கோபாலாகோவிந்தா என்று கோகுலத்தார் கூச்சலிட்டனர். எம பெருமான், கோவர்த்தன கிரியைத் தூக்கினான். குடையாகப் பிடித்தான் கல்லு மழை தடுக்கப்பட்டது இந்திரன் பயந்தான் ஓடிவந்து கண்ணனின் பாதத்தில விழுந்து வணங்கினான் தன்னை மகனிக்கும்படி வேண்டினான். கண்ணனருளால் எல்லா உலகமும் இன்பமடைந்தன.

எங்கெங்கும் கொண்டாட்டம்-தேவ
இந்திரன் பாதத் துணைவேண்டி
பொங்கற் கொண்டாட்டம். கோகுலம்
பூரண தோரணக் காட்சிதரும்



வந்தான் கண்ணபிரான்-பொங்கலை
மாட்டுக்கும் மலைக்கும் மறையவர்க்கும்
தந்தால் நலமென்றான்-யாவரும்
சம்மதித் தவ்விதம் பொங்கலுற்றார்

வெகுண்டான் இந்திரனும் - எழுவகை
மேகத்தை ஏவி மழை பொழிந்தான்
மிகவே பயந்தார்கள்- மழையின்
வேதனை யாலே திகைத்தழுதார்

கண்டான் மாயவனும் - இடைக்குலக்
கலக்கத்தைத் தீர்த்திட மனங்கொண்டான்
விண்சூழ் கோவர்த்தன- கிரியை
மேலே தூக்கிக் குடைபிடித்தான்

124029

மக்களும் மனந்தெளிந்தார் - அங்கே
வானவர் கோமான் வணக்கமிட்டான்
தக்கவர் காவலனே, உன்னைச்
சரணடைந் தேனெனைக் காத்திடென்றான்

அருள்புரிந் தான் கண்ணன் - வருணனும்
அரிஓம் எனச்சொல்லி அஞ்சலித்தான்
பெருகிடும் யமுனையிலே: கண்ணன்
பெரும் விளையாடல் புரிதலுற்றான்

### ஆடைகள் திருடியது

ஒருநாள் கண்ணன் பசுக்கூட்டத்தோடு புல்லாங்குழல் ஊதிக்கொண்டு வந்தான். யமுனா நதியிலே பெண்கள் நீராடுவதைக் கண்டான். அன்று மார்கழிமாதக்

கார்த்திகாயினி விரதம் கொண்டாடுவதற்காக அந்தப் பெண்கள் நீராடுகிறார்கள். ஆனால் அவர்களின் உடை முழுவதையும் யமுனைக் கரையிலே கழற்றி வைத்து விட்டு எல்லோரும் நிர்வாணமாகவே நீராடுகிறார்கள். ஓடி வந்தான் கண்ணன் எல்லோருடைய உடைகளையும் சேர்த்துக் கட்டினான். அங்குள்ள ஒரு கடம்ப மரத்தில் ஏற்றிக் கொண்டான். வேய்ங் குழலை வாயில் வைத்து வாசித்தான் பட்டமரங்கள் தளிர்த்தன பசித்த பிர்ாணிகள் பசிதீர்ந்தன. பாலைவனம் சோலைவனமானது மரங்களும் மிருகம், பறவை பாம்பு முதலிய பிராணிகளும் நட்டசித்திரம் போல் தம்மை மறந்து நின்றன நீராடிய பெண்களும் தம்மை மறந்தனர். சிறிது நேரத்தின் பின்பு, தாம் ஆடைகளைப் பறி கொடுத்தமை தெரிந்தது. ஓடிப்போய்க்கண்ணனை மன்றாடினார்கள். கண்ணன் பெண்களைப் பார்த்துச் சிரித்தான் பின் கோபித்தான்,

''அடி பெண்களே, யமுனா நதியானது வருண பகவானின் அம்சங்களுள் ஒன்று, நீங்கள் நிர்வாணமாக நீராடினால் வருணனை அபசாரம் செய்த பாவமாகும். வருணன் சாபத்தால் எண்ணில்லாத துன்பமும் நோய்களும் ஏற்படும். உங்கள் செயல் பெண்குலத்துக்கே இழுக்காகும் இனிமேல் இவ்விதம் செய்யக் கூடாது'' என்று கூறி ஆடைகளைத் திரும்பக் கொடுத்து எல்லாம் உலகமும் காண்கின்ற பற்பல நடனங்கல் புரியலானான்.



## ஆடைகள் களவெடுத்தான்

சுகந்தரு யமுனையிலே பெண்கள்
துகிலுன்றி நீராடும் காட்சிகண்டான்
திகழ்ந்திடு மாநிழலில் - மாதர்
சேர்ந்திடு மிடத்தினைக் குறிப்பெடுத்து

ஆடைகள் களவெடுத்தான் - பெண்கள்
அவலப்பட் டோடிவந் தீரந்து நின்றார்
பாடிடும் மாதர்களே - நீங்கள்
பதட்டமில் லாதென்றன் மொழிகேளீர்

நிருவாண கோலத்திலே - நீங்கள்
நீராடி னால்வருணற் கபசாரம்
தருவேன் துகிலெல்லாம் - இனிமேல்
தவறாது நடவுங்கள் எனப்பணித்தான்

வேய்ங்குழ லூதிடுவான் - கோகுல
வீதியெல் லாந்திரு நடமிடுவான்
வாய்ந்திடு கோவினமும் - பறவையும்
வண்டுகள் மரங்களும் மனங்குளிரும்

கண்ணபெருமானின் திருவிளையாடற் காட்சிகளைக் கண்டு களித்த நாரத முனிவர், சென்றார் கம்சனிடம். கண்ணனின் அருட்செயல்களையும், அவன் வாழுமிடத்தையும் கூறினார். அவனால் உன் உயிருக்கு ஆபத்து வரப்போகிறதென்றும் ஞாபகப்படுத்தி மறைந்து விட்டார்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

திடுக்கிட்டான் கம்சன். இவன் இன்னமும் உயிருடன் இருக்கிறானா? என்று ஏங்கினான். ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திம மல்லவா? எத்தனையோ குழந்தைகளின் தலைகளை வீணாக வெட்டுவித்தேனே; ஒன்றினாலும் இக்கள்வனைக் கொல்ல முடியாமற் போய்விட்டதே என்று மனந்தடுமாறினான் 'கேசி' என்ற அரக்கனை அழைத்தான் மல்யுத்தம் செய்து கண்ணனைக் கொல்லும்படி விடுத்தான் கண்ணனிடம் சென்ற 'கேசி' விண்ணுலகம் சென்றான்.

## கண்ணனைப்பற்றி நாரதர் கம்சனுக்குக் கூறுகிறார்

கண்ணனி னற்புதங்கள் - எல்லாம்
கம்சனுக் குரைத்தார் நாரதனார்
துண்ணென எழுந்தானே கண்ணனைத்
தொலைக்கு முபாயங்கள் துணிந்தானே

பொல்லாத கேசிஎனும் - அரக்கனைப்
போஎன விடுத்தான் கண்ணனிடம்
மல்லாடு மரக்கரொடு - கேசியும்
மாண்டான் மாயவன் மலர்க்கரத்தால்

பின்பு, அக்ரூரர் என்ற முனிவரை அழைத்தான் ஓ முனிவரே, நீர் கண்ணனிருக்குமிடம் தேடிச்சென்று, யான் செய்யும் தனுர்யாகத்துக்கு வரும்படி செய்ய வேண்டும். அவனை வஞ்சனையாலேயே கொல்ல வேண்டும். வேறு எந்த வழியாலும் கண்ணனை அழிக்க முடியாது என்று கட்டளையிட்டான்.



தவஞானியாகிய அக்ரூரர் கொடியவனை மனத்தால் கடிந்தார். அதனை வெளிப்படுத்தாமல் "உமது கட்டளைப்படியே செய்கிறேன்" என்று கண்ணனிடம் சென்றார் கண்ணனுக்கு விஷயத்தைச் சொன்னார். அவன் திட்டமிட்ட வஞ்சக விஷயங்களையும் சொன்னார். "முனிவரே அவனது வஞ்சனைகள் எல்லாம் அறிவேன் அறிவேன் என்றான் கண்ணன். முனிவரே யான் தனுர்யாகத்துக்கு வருவதாகக் கூறும்." என்று கண்ணன், கம்சனின் மாளிகை நோக்கிப் புறப்பட்டான், கோகுலத்தார் தடுத்தனர். அவர்களுக்கு ஆறுதல் கூறினான். வெற்றிமாலையுடன் வருவேன் என்று புன்னகை புரிந்தான். விடை பெற்றுச் சென்றான் கண்ணன்.

## கம்சனின் தனுர்யாகம் காணவரும்படி அக்ரூர முனிவர் கண்ணனிடம் தூதுவருகிறார்

4853 cc

கம்சனின் கட்டளையால் - அக்ரூரர்
கடுகிய தூதுவ ராகவந்தார்
இம்சைகள் எடுத்துரைத்தார் - கண்ணன்
யாவையும் கேட்டுத் தலையசைத்தான்

அவன்செயும் தனுர்யாகம் - காண
அரங்கனை வரும்படி அழைத்தாரே
கவலைகள் மிகவாகி - கோபியர்
கண்ணனை வாழ்த்தி அனுப்பிவைத்தார்

தீயவன் செய்யும்யாகம் - அவனின்
சீவனுக் கேமுடி வாகுமென
மாயவன் வாக்குரைத்து - நெஞ்சம்
மகிழ்வுற விடைபெற்றுச் சென்றானே

அக்ரூர முனிவருடனேயே கண்ணனும் செல்கிறான் கம்சன் தனுர்யாகம் எனக் குறிப்பிட்ட இடம் திட்டமிட்ட போர்க்களமாகமாறியது. கம்சன் தனுர்யாகத்துக்கு என்று ஒருவில்லை வைத்து விட்டு, மேடையிலேயே அந்தக் கண்ணனைக் கொல்வதற்குப் பல அசுரரை ஆயத்தப்படுத்தியிருந்தான். ஆனால் நிகழ்ச்சி விபரீதமாக முடிந்து விட்டது.

## கண்ணன் புறப்படும் போது

மென்னில மேனிஅண்ட வீதியில் பிரபைவீச
பொன்னாடை யுடுத்துவிரப் புதுமணிச் சிலம்புகட்டி
மின்னாரும் சடைமுடித்து வியனுதற் சுட்டிதீட்டி
பன்னாகக் குழைகள்பூட்டி படிகமுத் தாரம்சூட்டி

அம்புய வாயில்நல்ல ஆகுதிவெண்ணெய் தீற்றி
தம்பொழி முலைப்பாலோடு தனிப்பழச் சாறுமூட்டி
எம்பரம் பொருளேவெற்றி ஈட்டிவா எனயசோதை
உம்பரர்க் கமுதை, கண்ணீர் உகுத்து நின்றாசி
சொன்னாள்

கோகுலம் கண்ணீர்மல்க கோவினம் மனங்கலங்கி
நாகுலைந் தலைந்தாற்ற நந்தகோ ப்ன்யசோதை
வேகழல் வெண்ணெயாக விண்ணவர் துதிக்கக்
கண்ணன்
ஆகுலக் கம்சனூருக்(கு) அண்ணனொ டெழுந்து
சென்றான்



...நூலகம்
யாழ்ப்பாணம்

## கண்ணன் கம்சன் அரங்குக்கு வருதல்

அக்ரூர முனிவருடன் கண்ணபெருமான்
அண்ணன்பல ராமனுடன் கண்ணபெருமான்
பொற்கோலத் தேரேறிக் கண்ணபெருமான்
போனாரே மதுரைநகர் கண்ணபெருமான்

துள்ளுதமிழ் நடையுடனே கண்ணபெருமான்
சூரியனேபால் காட்சிதந்தார் கண்ணபெருமான்
வெள்ளமென சனந்திரள கண்ணபெருமான்
மிளிர்மேடை நேர்க்கிவந்தார் கண்ணபெருமான்

வழி நடந்து செல்லும் போது அவ்வூர் வணிகர்கள் முன்வந்து இருவரையும் உபசரித்தனர். தனுர்யாகம் செய்வதற்கென்று வில்லை எவ்விடத்தில் வைத்திருக்கின்றனர் என்று வினவி வழி தெரிந்து கொண்டு இருவரும் அவ்விடத்துக்குச் சென்றனர் வில்லைக் கண்டு வியந்தனர். அது வானவில்லென விளங்கியது. அதை அனேகர் காவல் காத்திருந்தனர். பல ரத்தினங்கள் பதிக்கப்பட்டுச் செல்வத்தின் உருவென இருந்தது. காவலாளர் தடைசெய்தும், மீறிக் கொண்டு கண்ணன் அந்த வில்லை இடது கையால் எடுத்தான். நாணேற்றி இமை கொட்டும் நேரத்தில் இரண்டாக முறித்தான். மதயானை கரும்பை முறித்ததோவென்று கண்டவர் ஆச்சரியம் அடைந்தனர். முறித்த சத்தம் ஊரெல்லாம் முழங்கியது. அதைச் செவியுற்ற கம்சன் நடுங்கினான் காவலாளர் வில்லும் கையுமாகக் கண்ணனைச் சூழ்ந்து கொண்டனர் '"குறுக்கிட்டவனைப் பிடியுங்கள் கட்டுங்கள்" என்று கதறினர் கண்ண

னும் பலராமனும் முறித்த வில்லைக் கையில் எடுத்துக் கொண்டு அவர்களைப் புடைத்தார்கள். பின்னர் அவ்விடத்தை விட்டு வெளியேறி மல்யுத்தம் செய்வதற்கென்று அமைக்கப்பட்டிருந்த அரங்கைப் பார்த்து ஆனந்த முற்றனர். இவர்களைக் கண்ட நகரவாசிகளோ, இவர்கள் தேவர்களோ என்றெண்ணினர். இவ்வாறு இரு குமாரர்களும் நகரத்தைச் சுற்றி வருகையில் கதிரவன் மறைந்தான். இரவு ஆரம்பமாயிற்று கண்ணனும் பலராமனும் நகருக்கு வெளியே கோபியர்கள் தங்கள் வண்டிகளோடு முகாம் செய்திருந்த இடத்தை அடைந்தார்கள். பாலும் அன்னமும் அருந்தி ஆனந்தமாக நித்திரை செய்தார்கள்.

*கண்ணனும்பல ராமனும்*
*களத்தில்வந்து குதித்தனர்*
*எண்ணும்தனுர் யாகத்துக்*
*கென்றுவைத்த வில்லினை*
*மெல்லவந் தெடுத்தனர்*
*வீரக்கண்ணன் முறித்திட்டான்*
*சொல்லொணாத கவலையால்*
*துட்டக்கம்சன் கலங்கினான்*

ஆனால் அன்றிரவு கம்சன் உறங்கவில்லை. இவ்வளவு பெரிய வில்லையும் முறித்துக் காவலாளர்களையும் வென்று விட்டார்களே இச்சிறுவர்கள் என்று எண்ணி எண்ணி ஏங்கினான். கெட்ட சொப்பனங்கள் கண்டான். கண்ணாடியில் தன் உடல் மட்டும் தெரிந்தது தலை தெரியவில்லை ஆகாயத்தில் எல்லாம் இரட்டையாகத் தெரிந்தன. தன்னுடைய



நிழலில் துளைகளைக் கண்டான். காதை மூடிக் கொண்டால் ரீங்காரம் கேட்கவில்லை. தரையில் தன் சுவடு தெரியவில்லை. மரங்கள் மஞ்சளாய் தென்பட்டன. இறந்தவர் வந்து தன்னைத் தழுவுவதாய் எண்ணினான். கழுதை மீது ஏறி ஊர்வலம் வருவதாய் நினைத்தான் துணியின்றி திரிகிறோமே என்று வியப்புற்றான்! தனது வாழ் நாள் தீர்ந்து விட்டது என்று பயந்து இமைகொட்டாமல் விழித்திருந்தான்.

பொழுது புலர்ந்தது. கிழக்குத் திசையில் கதிரவன் தோன்றினன் கம்சன் ஒரு மல்லர்கள் போட்டியை ஏற்பாடு செய்தான். கம்சனுடைய ஆட்கள் அரங்கை நீர் தெளித்துக் கொடி கட்டி அலங்காரம் செய்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் எல்லா இடமும் ஜனங்களால் நிரம்பியது: தனக்கென்று வேறாக அமைக்கப்பட்டிருந்த சிங்காசனத்தில் கம்சனும் அமர்ந்தான். ஆனால் அவனுடைய மனம் நொந்து களிப்பற்று இருந்தது பேரிகை நாதம் ஒலித்தது. மல்லர்கள் தத்தம் தொடையைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள். சாணூரன், முஷ்டிகன், கூடன் சாலன், தோசலன் முதலிய புகழ் பெற்ற மல்லர்கள் அங்கு வந்து கூடினார்கள். கம்சனால் அழைக்கப்பட்ட கோபர்களும் தங்களுக்கென்று தனியாக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

*கண்ணன் வந்தான் - வீரக்*
*கண்ணன் வந்தான்*
*மண்ணகத்துத் துயரம் தீர்க்கக்*
*கண்ணன் வந்தான்*

124029

புண்ணியத்தின் வடிவமாகக்
கண்ணன் வந்தான்
விண்ணவர்கள் தோத்தரிக்கக்
கண்ணன் வந்தான்

கண்ணனும் பலராமனும் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு மல்யுத்த அரங்கை அடைந்தனர் அரங்கின் வாயிலில் குவலயாபீடம் என்ற பட்டத்து யானை நின்று கொண்டிருந்தது. கண்ணன் அரை வேஷ்டியை இறுகக் கட்டிக் கொண்டான். தலையை முடிந்து கொண்டான் யானைப் பாகனைப் பார்த்து ''தாமதமின்றி எமக்கு வழி விடுவாய் இல்லையேல் உன்னையும் யானையையும் சேர்த்து யமலோகத்துக்கு அனுப்புவேன்'' என்று மேகமெனக் கர்ஜனை செய்தான். பாகனுக்குச் சினம் பொங்கியது. கண்ணன் மீது பாயும் படி யானையைத் தூண்டினான் யானை கண்ணனைத் தன் துதிக்கையால் பற்றிக் கொண்டது. ஆனால் கண்ணன் அப்பிடியினின்று நழுவி யானையின் கால்களுக்கிடையே ஓடலானான் யானை கண்ணனைக் காணாது திகைத்தது. பிறகு கண்ணன் இருக்குமிடத்தை நுகர்ந்து தெரிந்து கொண்டு திரும்பவும் மாதவனை தனது துதிக்கையால் பற்றிக்கொண்டது மறுபடியும் கண்ணன் நழுவி விட்டான். இச்சமயம் கண்ணன் யானையின் வாலைப்பிடித்து, கருடன் பாம்பை இழுப்பதைப் போல அதை ஆட்டினான். வாலை விட்டு விட்டு யானைக்கு முன் சென்று அதைக் கையால் அறைந்தான். திரும்பவும் ஓடி வரும் போது தடுக்கினாற் போல் தரைமீது விழுந்த கண்ணனைக் கொன்று விட யானை கோபத்தோடு முன்



வந்தது, கண்ணன் கொம்பைப் பிடித்து யானையைக் கீழே தள்ளினான் - சிங்கமென யானைமீது கால் வைத்துக் கொண்டு அதன் கொம்பைப் பிடுங்கி அதனாலேயே கண்ணன் யானையையும் பாகர்களையும் வதம் செய்தான்.

குவலயா பீடம் என்ற பெரும் யானையையும்
கூடிவரும் பாகரையும் கொம்பினாற்குத்தி
எமலோகம் போக்கினான் இடையர் குலக்கண்ணன்
இனி யிங்கு பயமில்லை என்றார்கள் மக்கள்

அப்பொழுது பேரிகையும் தாரையும் ஒலி செய்தன- சாணூரன் என்ற மல்லன் கண்ணனையும் பலராமனையும் நோக்கி அவர்களைப் போருக்கு இழுத்தான்- ''கண்ணா! பலராமா!! நீங்கள் இருவரும் வீரர்கள் மல்யுத்தத்தில் புகழ் பெற்றவரெனக் கேட்டு அரசன் உங்களை வரவழைத்திருக்கிறான். மாடு மேய்க்கும் பொழுது மல்யுத்தம் செய்து காலத்தைக் கழிப்பது இடையருக்கு வழக்கமன்றோ? ஆகவே, அரசருக்கு ஆனந்தம் அளிப்போம். மல்யுத்தம் செய்வோம்'' என்றான். இந்த மொழியைக் கண்ணன் வரவேற்றான். தகுந்த பதிலும் அளித்தான். ''காட்டில் வாழும் நாங்களும் அரசருக்குப் பிரியமான மல்யுத்தம் (குஸ்தி) செய்வோம். எங்களுக்குச் சிறுவயது. ஆயினும், எங்களுக்குச் சமமான திறம் படைத்தவருடன் மல்யுத்தம் செய்யச் சித்தமாயிருக்கிறோம்'' என்றான் அதற்குச் சாணூரன், ''நீ சிறுவனும் அல்ல பாலனு மல்ல பலராமனும் பலசாலிகளுள் பெரியோன். இல்லாவிட்டாலும் ஆயிரம் யானைகளின்

பலம்படைத்த குவலயா பீடம் என்ற பட்டத்து யானையை உன்னால் கொன்றிருக்க முடியுமா? ஆகவே நீ என்னுடன் சண்டையிடுவாய் பலராமன் முஷ்டிகனோடு போர் செய்யட்டும். இதில் தவறு ஒன்றுமே இல்லை'' என்றான்.

போரில் பேரிகை முழங்கியது
ஆரவாரித்தான் சாணூரன்
நேரில் வந்தான் முஷ்டிகனும்
நின்று சமரிட்டார் பலராமன்
பந்து போலவே வந்தர்கள்
பகைவரை எல்லாம் அழித்தார்கள்
விந்தையாகவே மேடையில் நின்ற
வீரரையெல்லாம் விண்ணில் போக்கினான்

கண்ணன் சாணூரனை வதம் செய்யத் திண்ணம் கொண்டான்- கண்ணனால் அடியுண்ட சாணூரன் திரும்பத் திரும்ப நினைவு இழந்தான் எழுந்து எழுந்து கழுகெனக் கண்ணன் மீது பாய்ந்து, தன் கையால் மாதவன் மார்பில் புடைத்தான், ஆனால் கண்ணன் நின்ற இடம்விட்டு அசையவில்லை. சாணூரன் கொடுத்த குத்தெல்லாம் யானை மீது எறிந்த பூமாலையெனக் கண்ணன் மீது மெதுவாக விழுந்தன. திடீரெனக் கண்ணன் சாணூரனைத் தன் தலைக்கு மேல் தூக்கி கறகறவென்று சுற்றினான். அப் பொழுதே அவன் உயிர் துறந்தான். கண்ணன் பிணத்தை புவிமீது எறிந்தான். அதே சமயம் பலராமன் ஒரே அடியால் முஷ்டிகனை வீழ்த்தினான். சாலன்' கூடன், தோசலன் முதலிய மல்லர்களையும்



கண்ணனும் பலராமனுமாய்க் கொன்றனர். மற்ற மல்லர்கள் தலைதப்பினால் போதுமென்று ஓடிப் போயினர். கண்ணனும் பலராமனும் தம் ஆயர் பாடித் தோழருடன் அரங்கில் ஆரவாரம் செய்து ஆடிக் களித்தனர்.

சாணூரன் மாண்டான்
முஷ்டிகனும் மாண்டான்
பேணிய தோழர்கள்
சாலனும் கூடனும்
தோசலனும் மாண்டார்கள்
துதித்தார்கள் தேவர்கள்
ஆகையால் கண்ணனை
அணைத்தார்கள் ஆயர்கள்

கண்டவர் அனைவரும் இவ்வீரச்செயலை மெச்சினார்கள். ஆனால் கம்சன் மனம் கொதித்தது, ''பேரிகையும் கொட்டும் நிறுத்துங்கள். வசுதேவன் மைந்தரை ஊரை விட்டு விரட்டுங்கள். கோபரின் செல்வத்தை பறியுங்கள்- நந்தனைச் சிறையிடுங்கள். வசுதேவனை மாய்த்து விடுங்கள் என்று சீறினான். இதைக் கேட்ட கண்ணன் கோபம் மேலிட்டுக் கம்சன் வீற்றிருந்த உன்னத மேடையின் மீது பாய்ந்தான். போர் தொடங்கி விட்டது.

கண்ணனு மவன் அண்ணனோடு
கடியகம்சன் எதிரிலே
கையில்வாளை ஏந்திவீசிக்
கருமலைபோல் நின்றனன்

துண்ணெனவே கம்சன் நெஞ்சம்
துடிதுடித்துக் கலங்கினான்
துண்டுதுண்டாய் இருவரையும்
துணிப்பேனென்று கூவினான்

பார்க்குமிட மெங்கணுமே
பாலக்கண்ணன் தோன்றினான
பலவாயிரம் ஆயுதங்கள்
பகவன் கையிற் கொண்டனன
போர்க்கு வந்த கண்ணன் தன்னை
புலவனென எண்ணினேன்
புனிதனிவன் மனிதனன்று
போற்றும் தெய்வம் இவனன்றோ

ஆடிப்பாடி நிற்கும் கண்ணன்
ஆதிதேவ னல்லவா
அறிவி லாமல் போர்புரிந்தேன்
ஆணவத்தில் மூழ்கினேன்
நாடியிவனை வணங்கி நின்றால
நாட்டு மக்கள் சிரிப்பரே
நடப்பதெல்லாம் நடக்கட்டு'' மென
நஞ்சுக்கம்சன் துள்ளினான்

ஓடும் கங்கைச் சடையன் போலும
உமையைப் போலும் விண்ணிலே
உள்ளகோடி தேவர் போலும்
உருவம் கண்ணன் காட்டினான்



தேடித் தேடி வாளைவீசி
செல்வக் கண்ணனை வெட்டினான்
திருட்டுக் கண்ணன் வாள்படாமல்
திசைதிசையாய் நின்றனன்

வாளைஎறிந்து வலிய கம்சன்
மதிவெதும்பி ஓடினான்
மாயக் கண்ணன் கொடியவன் தலை
மயிரைப் பிடித்து வீழ்த்தினான்
கோளைக் கம்சன் உயிர்முடித்துக்
கொழுத்த உடலைத் தரையிலே
கொண்டிழுத்துச் சென்று வெற்றி
குலவு வாகை சூடினான்

4553 cc

மேடையெல்லாம் கண்ணன் வடிவம், மின்னலைப் போல் அங்குமிங்கும் கண்ணன் காட்சி தந்தான். காலகாலனாக நின்றான். இந்தக் கள்ளனை இமைப் பொழுதில் கொன்றொழிப்பேனென்று கம்சன் சீறினான்.

கம்சன் கறகறவென்று பற்களைக் கடித்தான். நிலத்தை உதைத்தான். பூமியதிர்ந்தது மக்கள் கூட்டம் பயந்து நடுங்கியது. குழந்தைக் கண்ணன் நிலை எப்படி முடியுமோ என மக்கள் மனங்கலங்கினர். கண்ணனைக் கொல்வதற்கு வாளை ஓங்கிய வண்ணம் கம்சன் கர்ச்சனை செய்தான்.

இதைக், கண்டான் கண்ணன். யானையின் மேல் சிங்கம் பாய்வது போல எம்பெருமான். கம்சனின்

உச்சிமயிரைப் பிடித்து இழுத்து அவனை நிலத்தில் விழுத்தினான். விழுந்தவன் மேலே ஏறினான் கண்ணன். கொடியவனுடைய உயிர் பிரிந்தது, உயிர் பிரிந்த உடலைக் கண்ணன் தரை மீது இழுத்துச் சென்றான்.

சிங்கத்தைப் போல் பாய்ந்தான் கண்ணபெருமான் – கம்சன்
சென்னிஉச்சி மயிர் பிடித்தான் கண்ணபெருமான்
அங்கவனை விழுத்தி விட்டான் கண்ணபெருமான் – நிலத்தில்
அழுத்தி இழுத்து வந்தான் கண்ணபெருமான்
ஆவி பிரிகையிலே கண்ணபெருமான் – அவனுக்
கருட்சோதிக் காட்சி தந்தான் கண்ணபெருமான்
தேவர் மலர் சொரிந்தார் கண்ணபெருமான் – மக்கள்
சீர்பெருகி வாழவைத்தார் கண்ணபெருமான்

மக்கள் வெள்ளம் கண்ணனுக்கு ஜே கோபாலனுக்கு ஜே கிருஷ்ணனுக்கு ஜே என்று முழங்கியது. விண்ணவர் முனிவர் தொழுதனர் கந்தருவர், கின்னரர், கிம்புருஷர் அரம்பையர்கள் பாடியாடி ஜெயந்தி கொண்டாடினர் பூவுலகும் கோகுலமும் புதுப் பொலிவுற்றன.

கொடிய கம்சன், நெடியமாயனாகிய கண்ணனின் திருவடிகளில் ஜோதியாகிக் கலந்தான். கண்ணன் வந்த வண்ணத்தின் முக்கிய அம்சம் பூர்த்தியானது. கண்ணன் மேலும் பற்பல திருவிளையாடல் செய்து ஸ்ரீ கிருஷ்ணனாக சத்திய பாமா ருக்மணி என்ற சக்திகளுடனே துவாரகாபுரியின் மன்னவனாகி மனுநெறி காத்தான்.



கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளையாக பேராயிரம் படைத்த பெருமானாக, வாராத செல்வம் வருவிப்பானாக, நாராயண மூர்த்தியாக உலகெங்கும் வீற்றிருக்கின்றார்.

## கண்ணனுக்கு வெற்றி

பூமாரி புரிந்தனரே
பூவுலகும் வானுலகும்
தேன்மாரி இசைமுழங்க
செங்கண்ணன் ஜெயங்கண்டான்

இலட்சுமியாம் ருக்மணியை
இனியமணம் பூண்டுகொண்டான்
குலவுசத்ய பாமாவைக்
குளிர்ந்தமணம் புரிந்தானே

ஓங்குபுகழ்த் துவாரகையில்
ஓங்கார மன்னனெனப்
பாங்கான அரசியற்றி
பயில்தருமம் வளர்த்தானே

௨

## உலகங்களெல்லாம் கண்ணன்

இராகம்: சிம்மேந்திரமத்திமம் தாளம்: ஆதி

பல்லவி

உலகங்கள் எல்லாம் நீயல்லவோ - வாழும்
உயிர்களுக் கெல்லாம் தாயல்லவோ - கண்ணா (உல)

அநுபல்லவி

கலைமலி வேய்ங்குழல் கொண்டவனே - இரு
காலடி யால்மண்ணை உண்டவனே - கண்ணா (உல)

சரணங்கள்

1. துட்டரை யழித்திட வந்தவனே - எங்கள்
துன்பம் துடைத்தின்பம் தந்தவனே - ஐவர்
முட்டிய பாரதத் தூதுவனே - சிங்க
முகத்துட னேநின்ற மாதவனே - கண்ணா (உ)

2. சோதரி யழைக்கத் துகில் கொடுத்தாய் - வானில்
சொரிமழை தடுக்க மலை யெடுத்தாய் - மிதிலைச்
சீதையை மணக்கச் சிலைமுறித்தாய் - இலங்கைச்
செங்கோல் இராவணன் தலையறுத்தாய் கண்ணா
(உ)

3. அன்பரைப் பிரியாத அரங்கேசா - பாடும்
அருட்புலவன் பின்தொடர்ந்த தமிழ் நேசா - எழு
பொன்மலை பொருந்தும்வை குந்தவாசா - நெஞ்சில்
பூமக ளைச்சுமக்கும் வெங்கடேசா கண்ணா (உ)

4. பூதங்க ளைந்தும் சூழ்கடலும் - வந்து
பொருந்திடு மலைகளும் நதி பலவும் - நிகழ்ச்சி
பேதங்கள் புரிந்திடும் நாள் கோளும் - புகழ்
பேசிடும் மறைகளும் பழம் நூலும் - விளங்கும் (உ)

5. சிவனென்ற உமையென்ற தேவர்களாய் - பிறவிச்
செயலைந்து புரிந்திடும் மூவர்களாய் - உயிரின்



பவமளந் திடுமெட்டுத் திசையினராய் - ஆறு
பத்துநாற் கலைபரப்பும் இசையினராய் - வளரும்
(உ)

6. அப்பன்நீ அம்மைநீ சோதரர்நீ - அன்பின்
அணிதரும் மக்கள்மனை உறவுகள்நீ - சொந்தக்
கப்பலை விட்டுக்கரை சேர்வேனோ - உனது
கழலிணைத் தேனுண்டு வாழ்வேனோ - கண்ணா
(உ)

வாழ்த்து

நிலமா தவக்கண்ணன் நெடுந்தாள் வாழி
நிதிமாது வாழிநில மடந்தை வாழி
கோலமா குடைபிடிக்கும் அரவம் வாழி
குணக்கருடன் சங்குசக் கரங்கள் வாழி
ஞாலமேல் நடமாடிச் சொன்ன கீதை
நலம்வாழி நாரணனின் அடியார் வாழி
பாலனென அவதரித்த கண்ணன் காதை
படித்துணர்ந்தோர் கற்பகமாய் வாழி! வாழி!!

124029

சுபம்

# தேர் விழாப்பாடல்


குண்டலம் இரண்டோடு குலவுசடை முடிமிளிரக்
குளிர் கமல வாயரும்ப
குலவுகௌத் துவமணியும் துளசிமணி மாலைகளும்
கோலமார் பினில் விளங்க
தண்டு கமலம் திகிரி சங்குநாற் கரம்நின்று
தண்ணருள் மழை வழங்க
சாந்த மங்களநீல வண்ணனாய்த் திருமகள்
தழுவுவல மும் புவனியாள்
கொண்டிடம் திகழவும் பண்டரவ மாயளவை
கூடுநா கேஸ்வரத்தின்
கோயிலுறை அரிநாக வரதநா ராயணா
குறைபோக்கும் கண்ணழகனே
வண்டுறையும் நின்பாத மலரிணையெம் தலைவைத்து
மகிழின்ப வாழ்வு தருவாய்
மன்னும் ஆவணிக் கிருஷ்ண ஜயந்திரதம் ஏறிவரும்
மாதவ மகா தேவனே

4853

அச்சுப்பதிப்பு: அபிராமி அச்சகம் கொக்குவில்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
(பிரதம இயக்குநர்)



அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள்